# நாலடி நானூறில் கல்வி விழுமியங்கள்

***செல்வி மு. ஆனந்தி, எம்.ஏ***
இளநிலைக் கல்வியியல் இரண்டாமாண்டு
ஸ்ரீ கலைமகள் கல்வியியல் கல்லூரி, நாட்றம்பள்ளி, திருப்பத்தூர் மாவட்டம்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783125

*பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் உள்ள சமணசமய அறநூல்களில் நாலடியார் மிகவும் முக்கிய நூலாகக் கருதப்படுகிறது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று முப்பாலாகப் பிரித்து அதனுள் பல்வேறு செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. அதன்படி கல்வி எனும் அதிகாரத்தின் வழி நாலடியார் எழுதப்பட்ட காலகட்டத்தில் உருவான கல்வியின் தேவையும், கல்வியின் மீதான சமூகப் பார்வையும் எப்படி இருந்தது என்று அறிந்துகொள்ள முடிகிறது. பொதுவாக அழகு என்பது இருவகையில் அமையும். அக அழகாகிய கல்வி கற்று அதன்வழி பெறுகின்ற நல்ல குணநலன்களின் அழகு. மற்றொன்று அழகிய அணிகலன்கள், ஆடை, அலங்காரங்களால் கிடைக்கும் புற அழகாகும். இவ்வகையில் ஆண்களின் தலைமுடியின் அழகு, உடையின் அழகு, பெண்களின் மஞ்சள் பூசும் அழகு எல்லாம் அழகே கிடையாது என்று நாலடியார் கூறுகின்றது. நல்ல நூல்களைக் கற்று நல்ல மனிதராக எல்லா சூழல்களிலும் நடுவுநிலைமை தவறாதவராகத் திகழும் வாய்ப்பினைத் தரும் கல்வியால் கிடைக்கும் உள்ளத் தூய்மையே உண்மையான அழகு. அக அழகை விட புற அழகு சிறந்தது என்று எண்ணுகின்ற இச்சமூகத்திற்கு உண்மையை உணர்த்துகின்ற வகையில்,*

***'குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லையாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு'*** [1]

*என்ற பாடல் நாலடியாரில் இடம்பெற்றுள்ளது. புற அழகு ஒரு மனிதனை அழகுடையவனாகக் காட்டுவதை விட, கற்ற கல்வியின் வழி அவன் பெற்ற அழகே அவனுக்குப் பெரும் அழகாக அமையும்.*

*ஒரு மனிதருக்கு வரும் உடல் நோய்களை நீக்குவதில் மருந்தானது இன்றியமையாததாகும். ஆனால், அறியாமையாகிய நோயைப் போக்குவதில் மருந்தாகப் பயன்படுவது கல்வியாகும். கல்வியைப் போன்ற அறியாமையைப் போக்கும் மருந்து உலகில் வேறு இல்லை என்று கூறுவதும் பொருந்தும். ஒரு சமூகத்தில் தாழ்ந்த குடியில் பிறந்த ஒருவர் கல்வி, கேள்விகளில் சிறப்பு உடையவராகத் திகழ்ந்தால் அவரும் சமூகத்தில் மிகவும் உயர்ந்தவராக வைத்துப் போற்றப்படுவார் என்பதை நாலடியார் பாடல் வழி அறியலாகிறது. அதனால்தான் அதிவீரராம பாண்டியன் தன்னுடைய நூலில்*

***'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'*** [2]

*என்று குறிப்பிடுகிறார். எப்படியாவது யாசகம் பெற்றேனும் ஒரு மனிதனைப் படித்திட வேண்டும் என்று கூறுகிறார். ஏனெனில் படித்தோரே சமூகத்தில் சிறப்பு உடையவராகக் கருதப்படுகிறார். அதுமட்டுமன்றி கல்வி என்ற எல்லையிலா களத்தினுள் மனிதர்களுக்குக் கல்வியைக் கற்பதற்கென கிடைத்த காலமானது மிகவும் குறைவு. அக்குறைந்த காலகட்டத்தில் படிக்கிறேன் என்று கூறிக்கொண்டு அனைத்து விதமான நூல்களையும் படிக்காமல் நம் வாழ்விற்கு நன்மையையும் மெய்ஞ்ஞானமும் கிடைத்திட உதவும் நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்து வாசிக்க வேண்டும். அவ்வாறு வாசித்து நாம் சேர்த்து வைத்திருக்கும் கல்வி அறிவு என்பது*

*மிகப்பெரிய செல்வமாகும். ஏனெனில், பிற செல்வம் அனைத்தும் பலரால் சேமித்த இடத்திலிருந்து திருடப்பட்டுவிடும். கொடுத்தாலும் குறைந்துகொண்டே இருக்கும். ஆனால், ஒரு மனிதன் கற்ற கல்வியானது, அவனிடமிருந்து எந்தச் சூழ்நிலையிலும் பிரிக்க இயலாததாகத் தெரியும். திருட முடியாததாக நிலைத்திருக்கும் செல்வமாக அமைந்திருக்கும்.*

> **"வைப்புழிக் கோட்படா வாய்த்தீயினைக் கேடில்லை**
> **மிக்க சிறப்பின் அரசா செறின்வவ்வார்**
> **எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன**
> **விச்சைமற் றல்ல பிற"[3]**

*என்ற நாலடியாரின் பாடல் வழி ஒருவன் குலவழிச் சொத்து என்று தன் பிள்ளைகளுக்குச் செய்யத் தகுவன கல்வி செல்வங்களே, மற்ற பிற செல்வங்கள் அனைத்தும் அழிந்து போகும் இயல்புடையன ஆகும். நட்பு என்பது மனிதர்களின் வாழ்வில் மிக முக்கியமான உறவாகக் கருதப்படுகிறது. அவ்வகையில் கல்வி கற்றோரின் நட்பு என்பது சாதாரணமானோருடன் இருக்கும் நட்பைக் காட்டிலும் மேன்மை உடையதாகக் கருதப்படுகிறது. கல்வி கற்ற சான்றோருடன் ஒருவன் கொண்டுள்ள நட்பானது நுனியிலிருந்து கரும்பை அடிநோக்கி உண்பது போல காலங்களினூடே இனிமை பயப்பதாக இருக்கும். நற்குணமற்ற அற்ப குணமுடையோருடன் கொண்ட நட்பானது காலங்கள் செல்லச் செல்ல அடியில் இருந்து கரும்பை நுனி நோக்கி உண்பது போல சுவையும் புரிதலும் குறைந்து கொண்டே செல்லும். அதனால், நட்பு என்பது அடிக்கரும்பில் இருந்து நுனிக்கரும்பை உண்பதாகஅமைதலே சிறப்பு. கல்வி கற்காத நபர் கல்வி கற்க வேண்டிய வாய்ப்புகளைப் பெற இயலவில்லை என்று வருந்துவதை விட கல்வி கற்ற நபருடன் சேர்ந்து பழகும்பொழுது அவரிடம் இருந்து நல்ல அறிவு நுட்பங்களைக் கல்வி கற்காதவரும் பெறுகின்ற வாய்ப்பு அமைகிறது. அவ்வகையில் கல்வி கற்றவர் கல்வி கற்காதவரையும் அறிவு பெறச் செய்து விடுவார்.*

> **'கல்லா அறிவின் கயவர்பால் கற்றுணர்ந்த**
> **நல்லார் தமதுகனம் நண்ணாரே - வில்லார்**
> **கணையிற் பொலியும் கருங்கண்ணாய் நொய்தாம்**
> **புணையிற் புகும்ஒண் பொருள்'[4]**

*கல்லாதார் கற்றறிந்தோரிடம் சேரும்போது அறிவைப் பெறுவர். ஆனால், கல்வி கற்றவன் கல்லாதாரிடம் சென்று சேர்கிறார் எனில் தங்களின் கல்விகற்று பெற்றிருந்த அறிவும் பெருமையும் இழந்துவிடுவர். கல்வி என்பது நல்ல நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படித்து நல்ல கற்றோருடன் நெருங்கிப் பழகி அறிவினைப் பெருக்கிக் கொண்டு சமூகத்தில் நன் மதிப்புடன் திகழ வேண்டும் என்பதை நாலடியார் பாடல்களில் உள்ள கருத்துகளின் வழி அறியமுடிகிறது.*

*அறநூல்கள் என்பவை மனித சமூகத்திற்கு அறம் கூறுவதன் வழி சமூத்தினை நல்வழிப்படுத்தின. பல்வேறு வழிகளில் அறம் கூறினாலும் கல்வியின் வழி அறம் கூறிவதில் நாலடியார் என்ற அற நூல் முனைப்புக்காட்டிய விதம் அறியலாகின்றது. அவ்வகையில் கல்வி என்பது மனித சமூகத்தில் அவர்களின் நல்வாழ்விற்கு அடிப்படையாக இன்று வரை முதன்மைப்பெற்று வருகின்றது. கல்வி கற்றோரின் மேன்மையும் கல்லாதாரின் அவலமும் நாலடியாரின் வழி அறியலாகின்றது.*

### சான்றெண் விளக்கம்

1. *நாராயண வேலுப்பிள்ளை. எம். (உ.ஆ.), திருக்குறள், கு.எ.410.*
2. *பத்மதேவன் - தமிழ்ப்பிரியன். (உ.ஆ.), நீதி நூல் களஞ்சியம், நாலடியார், பா.எ.131.*
3. *மேலது. வெற்றி வேற்கை, பா.எ.35.*
4. *மேலது. நன்னெறி, பா.எ.25.*

### துணைநூற் பட்டியல்


1. *பத்மதேவன் - தமிழ்ப்பிரியன் - நீதிநூல் களஞ்சியம், கொற்றவை வெளியீடு, சென்னை, மு.ப-2013.*
2. *நாராயண வேலுப்பிள்ளை. எம். (உ.ஆ) - திருக்குறள், நர்மதா பதிப்பகம், சென்னை.*